இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 253 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 11 – வெள்ளிக்கிழமை 24 ஏப்ரல் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 253 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 11 - Friday 24 April 2026 - Madurai 8 Pages ₹ 5.00






கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது குடும்பத்தாருடன் வருகை தந்து நேற்று (23.4.2026) சென்னை எஸ்.ஐ.இ.டி கல்லூரியில் சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான தனது வாக்கினை பொதுமக்களுடன் வரிசையில் நின்று வாக்களித்தார்.

## தமிழ்நாடு முழுவதும் விறுவிறுப்பான வாக்குப்பதிவு! வரிசையில் நின்று

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்களித்தார்!

## ‘தமிழ்நாடு வெல்லும்’ என உறுதி!

**சென்னை, ஏப்.24-**

**தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு தமிழ்நாடு முழுவதும் விறுவிறுப்பாக நடைபெற்றது. கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் வாக்களித்தார். வாக்களித்தபின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் ‘தமிழ்நாடு வெல்லும்’ என்று குறிப்பிட்டார்.**

**சட்டமன்றத் தேர்தலையொட்டி தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் வாக்கினைப் பதிவு செய்தனர்.**

தமிழக சட்டமன்றத்துக்கான தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ந் தேதி அன்று அறிவித்தது. அதன்படி, ஏப்ரல் 23ந்தேதி ஒரே கட்ட தேர்தல் நடைபெறும் என்றும் வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி அன்று நடைபெறும் என்றும் இந்தியத் தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

இதனையடுத்துஅரசியல் கட்சிகள் கூட்டணிப் பேச்சு வார்த்தை நடத்தியும், தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, தேர்தல் அறிக்கை தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை முடித்து, தீவிர பிரச்சார பணிகளில் ஈடுபட்டன. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டார்.

அதேபோல் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்பட தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தேசிய கட்சியின் முன்னணித் தலைவர்கள் பிரச்சாரம் மேற்கொண்டனர். தமிழ்நாடு முழுவதும் அரசியல் கட்சி தலைவர்கள் கடும் வெயிலிலும், தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு, பொதுமக்களைச் சந்தித்து, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் அனல் பறந்த தேர்தல் பிரச்சாரம் கடந்த 21ந்தேதி மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. தேர்தல் பிரச்சாரம் முடிந்த உடன் தேர்தல் தொடர்பான விதிகள் அமலுக்கு வந்தன.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் வாக்களித்தார்!**

இதனைத் தொடர்ந்து தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று காலை 7 மணியளவில் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை, சென்னை தேனாம்பேட்டையில் உள்ள எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் குடும்பத்தினருடன் சென்று வாக்களித்தார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!**

வாக்களித்தபின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில், “நான் எப்படி ஜனநாயக கடமை ஆற்றியிருக்கின்றேனோ, அதே போல் தமிழக மக்கள் அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும். தமிழ்நாடு வெல்லும்” என்று கூறினார்.

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்களித்தார்!**

அதேபோல் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி கிருத்திகா உதயநிதி, இன்பநிதி உதயநிதி ஆகியோர் எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் வாக்களித்தனர். கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், காட்பாடியிலும், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, தாம்பரத்திலும், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு திருச்சியிலும், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இராதாகிருஷ்ணன் சாலை தூய அப்பாஸ் பள்ளியிலும் வாக்களித்தனர்,

இதேபோன்று அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், தோழர்கள், திரையுலக பிரமுகர்கள் அனைவரும் தத்தம் தொகுதிகளில் வாக்களித்தனர்.

**மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்!**

தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர்.

**வாக்குப்பதிவு அதிகரிப்பு!**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் கடந்த 2021 தேர்தலைவிட இந்தத் தேர்தலில் மக்கள் ஆர்வமுடன் வாக்களித்தனர். இதனால் வாக்கு சதவிகிதம் அதிகரித்துள்ளது. பிற்பகல் 1 மணி நிலவரப்படி 57 சதவிகிதத்தை தாண்டியுள்ளது.

---

## உங்களின் வாக்கு

# தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் ஏந்தும் கேடயம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஏப். 24-**

**“நீங்கள் அளிக்கும் வாக்கு தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் ஏந்தும் கேடயம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்..**




முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தவறாது வாக்களியுங்கள்!

2026 சட்டமன்றத் தேர்தலில் எனது வாக்கினைச் செலுத்திவிட்டேன். தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அனைவரும் தவறாமல் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள்.

இன்று நீங்கள் அளிக்கப் போவது வாக்கல்ல; தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் ஏந்தும் கேடயம்! உங்கள் வாக்குதான் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும்.

ஜனநாயகம், மதச்சார்பின்மை, மாநில உரிமைகள், சமத்துவம், சமூகநீதி ஆகிய அரசியலமைப்பின் உயர்ந்த விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் உங்களின் வாக்கு அமையட்டும்!

தமிழ்நாடு வாக்களிக்கும்; தமிழ்நாடு வெல்லும்!

வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.